IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No. 653 / 2009

Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயா | Caste | : - |
| Husband's Name | : கிருஷ்ணன் | Calling | : - |
| Village | : | Religion | : - |
| Taluk | : | Age | : 00 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 21 day of January, 2021.

Cross Examination Continuation

வழக்கு தாக்கல் செய்த ஆண்டு 2009 ஆகும். என்து தாத்தா சொத்தில் பங்கு வேண்டும் என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கேசவரெட்டியிடமிருந்து பங்கு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பாகம் கேட்டு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் அனுப்பியுள்ளேன். அதன் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றும் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா 1921 முதல் அனுபவத்தில் இருந்துவருவதற்கு ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். 1921 பத்திரத்தில் சர்வே எண்.19/1 என்ற சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ1 ஆவணத்தில் சர்வே எண். 19/1 என்ற சொத்து காணப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 119, 31, 22/2 என வேறு சர்வே எண்கள் உள்ளன என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1, சர்வே எண். 19/1 என்ற தாவாசொத்திற்குரியது அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ4 ஆக கிரைய ஆவணம் கேசவரெட்டியும், நாரயணசாமி வாங்கிய கிரைய ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சர்வே எண். 19/1-ல் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றுள்ளார் என்றால், 2 அங்கணம் வீடு, 4 அங்கணம் வீடு, ஓட்டு வீடு 2 அங்கணம், மாட்டுபட்டி 3 அங்கணம் ஆகிய சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார். நான் சொல்வதுபோல மேற்சொன்ன சொத்துக்களை

வா.சா.ஆ4 கிரைய ஆவணத்தில் கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. அன்னப்பரெட்டி எனது தாத்தா ஆவார். அவருக்கு அக்கம்மாள் என்ற மனைவியும், எங்கம்மாள் என்ற மகளும் வாரிசுகளாக இருந்தார்கள். அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் இறந்ததற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்களின் வாரிசு சான்றிதழ்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கம்மாளின் மகள்களான துளசியம்மாள் மற்றும் தனலட்சுமியம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் மேற்படி இருவரும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவர்களின் இருவரின் வாரிசுசான்றிதழ்களை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல அவர்களின் வாரிசுசான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாரிசு சான்றிதழ் வீட்டில் வாங்கி வைத்திருக்கிறேன் என்றும் அதை நான் தாக்கல் செய்யவில்லை சாட்சி தற்பொழுது கூறுகிறார். முதன்முதலில் வழக்கு தாக்கல் செய்தபோது கேசவரெட்டி மீது தான் தாக்கல் செய்தேன். அவர் சொத்துக்ளை விற்றுவிட்ட காரணத்தினால் வழக்குரையை திருத்தம் செய்து பிரதிவாதிகளை வழக்கில் சேர்தேன் என்றால் சரிதான். எனக்கு இடைஞ்சல் செய்தவரை மட்டும் கட்சி சேர்த்துள்ளேன். சண்முகியம்மாளிடமிருந்து கேசவரெட்டி 2000-ல் கிரையம் வாங்கியருப்பதால் அவர்களை நான் கட்சி சேர்த்துள்ளேன். கேசவரெட்டி கிரையம் வாங்குவதற்கு முன்னர் சண்முகியம்மாள் மட்டும் உயிருடன் இருந்தார். சண்முகியம்மாள் சுவாதீனத்தில் இருந்தார் என்றால் சரியல்ல நாங்கள் எங்கள் பாகத்தையும், சண்முகியம்மாள்அவரது பாகத்தையும் அனுபவம் செய்துவந்தார். நாங்கள் சுவாதீனத்தில் இருந்ததற்கான ஆவணங்களை எனது பெயரில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல வரி ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் தாவா சொத்து எங்கள் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. என்னை பெரியபுதூரில் 1962-ல் திருமணம் செய்துகொடுத்தார்கள். அது முதல் எனது மாமனார் வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல வந்து செல்வேன். கண்டிப்பேடில் நான் வேலை செய்ததால் எனது பிறந்து வீட்டிற்கு வந்து செல்வேன். எனது வீட்டிற்கு நான் தான் பொறுப்பு. நான் எனது மாமியார் வீட்டிற்கு வாரத்திற்கு ஒருமுறை சென்று வந்துவிடுவேன். நான்

தற்பொழுது கண்டிப்பேடில் வசித்து வருகிறேன். காந்திநகர் 3வது குறுக்கு தெருவில் வசித்து வருவதாக பிரமாணவாக்குமூலத்தில் ்சொல்லயுள்ளது சரிதான். இந்த முகவரியில் 15 ஆண்டுகளாக இருந்து வருகிறேன். தாவா சொத்திற்கும் நான் வசித்து வரும் இடத்திற்கும் 8 கி.மீ தூரம் இருக்கும். காந்திநகர் முகவரியில் அனைத்து அடையாள அட்டையும, வாக்காளர் அடையாள அட்டையும் உள்ளது என்றால் சரிதான். எனது தந்தையாரும், தயாரும் தாவா சொத்தில் வாழ்ந்ததற்காக ஆவணங்களை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ5, -ன் படி சர்வே எண். 19/1-ல் மொத்தம் 670 1/2 சதுரடி மட்டுந்தான் வெங்கட்ரெட்டி கிரையம் பெற்றதாக உள்ளது என்றால ்சரிதான். இந்த அளவை தான் நான் எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் மொத்த விஸ்தீரணத்தையும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 3 அயிட்டங்களாக குறிப்பிட்டுள்ளேன். வழக்குரை சொத்து விவரமத்தில் கி/மே அடி மற்றம் தெ/வ அடியில ்எந்த அளவும ்குறிப்பிட்டு சொல்லவில்லைள்னறால் சரிதான். சர்வே எண். 19/1-ஐ 3 அயிட்டங்களாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்குரையில் வாதிகளுக்கு பங்கு மட்டுந்தான் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும், 1ம் வாதிக்கு எவ்வளவு பங்கு என்றும், 2 வாதிக்கு எவ்வளவு என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நானும், 2ம் வாதியிம் ஒரு தாயின் மகள் என்பதாலும், 3ம ்வாதி வேறு ஒரு தாயின் மகள் என்பதாலுதம் நாங்கள் கோரியுள்ள சமபாகம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல. இன்று வரை பிரதிவாதி கேசவரெட்டி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால ்சரியல்ல., ஜி.எம் கேவசரெர்ட்டி தான் அனேுபவம் செய்துவருகிறார். ஜி.எம் கேவசரெ்டடி இன்று உயிருடன் உள்ளாரா என்றால ்இல்லை. அவரது இறப்பு சான்றிதழ் மற்றும ்வாரிசு சான்றிதழ் தாக்கல ்செய்யவில்லை. 1ம் பிரதிவாதி இன்று வரையில் தாவா சொத்தில் அனுபவம் செய்துவருகதால ்அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை இன்று வரை நான் தான் அனுபவம் செய்துவருகிறேன். நான் சொல்வதுபோல தாவா சொத்தை நான் அனுபவம் செய்து வரவில்லை என்றும், 1ம் பிரதிவாதி அனுபவம் செய்துவருகிறார் என்றும் வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ9 விண்ணப்பத்தில் வீட்டு எண் மற்றும் சர்வே எண் உள்ளதா என்றால் சரியல்ல.

வழக்குரையில் நான் குறிப்பிட்டுள்ள சொத்துவிவரதிற்கும் வா.சா.ஆ9 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்திற்கும் வேறு பாடு உள்ளது அவை வெவ்றோனது என்றால் சரியல்ல. வழக்குரையில் சொத்து விவரத்தில் கதவு எண் குறிப்பிட்டு தாக்கல ் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ9 வழக்குரைத்சொத்திற்குரிய ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ10 ஆவணத்திலும் சர்வே எண், கதவு எண் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ10 வழக்குரைச்சொத்திற்கு சம்மந்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ11 ஆவணத்தில் கதவு எண். 1/8 என உள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் சொத்து விவரத்தில ் இன்றுவரையில கதவு எண். 1/8 என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால ் சரிதான். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சர்வே எண். 19/1 என்பதை வழக்குரை தாக்கல் செய்த பிறகு சர்வே எண். 19/65 என்று மனு தாக்கல் செய்து திருத்தம் செய்தேன் என்றால ் சரிதான். வா.சா.ஆ12 மனைவரி தோராய பட்டாவில் கி/மே அளவுகளும், தெ/வ அளவுகளுமத் தெளிவாக குறிப்பிட்பட்டுள்ளன என்றால் சரிதான். வழக்குரை சொத்துவிவரத்தில் மனைவரி தோராய பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல கி/மே அளவுகளும், தெ/வ அளவுகளும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்குரை சொத்து எங்களுக்கு சம்மந்தமில்லாத சொத்து என்பதால் இன்று வரை வழக்கரையை திருத்த நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பலமுறை வழக்குரையை திருத்தம் செய்ய மனு செய்தபோதிலும் வழக்குரை சொத்தில் கி/மே மற்றும் தெ/வ அளவுகளை குறிப்பிட முன்வரவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த காலததில் காந்திநகர் 3வது தெருவில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல ் செய்த காலத்தில் வழக்குரை சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றும், அதனால் தாவா ரொசத்தின் அனுபவத்தில் நான் இருப்பதுபோல் வழக்கு தாக்கல் செய்ய அறுகதையில்லை என்றால ் சரியல்ல. எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும ் என்றால ் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் வழக்கிற்கு தேவையில்லாத நபர்கள் ஏ்னறால் சரியல்ல. இன்று வரை தாவா சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் பெற்று நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இன்றைய தேதிவரையில் கேசவரெட்டி பெயரில் தான் தாவா சொத்திற்குரிய வருவாய் ஆவணங்கள் உள்ளது என்றால், 1,3

மற்றும் 4 பிரதிவாதிகள் பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்று சாட்சி கூறுகிறார். அதற்குரிய ஆவஙண்களை நான் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொததிற்கும் எனக்கும் எந்த வித சம்மந்தம் இல்லை என்றும், வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்களை தாக்கல் செய்து பிரதிாவதி களை அலைகழிக்கவேண்டும் என்ற நோக்கத்திலும், பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்திலும் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால் செலவு தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.